**மொரவெவ பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி 07 மாத தாமதத்தின் பின்னரும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 22 ஆந் திகதி 13 மாத தாமதத்தின் பின்னரும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 மார்ச் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மொரவெவ பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,053,056 தொகையான ஊழியர் கடன் மீதி ரூபா 742,617 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் ஊழியர் கடன் ரூபா 310,439 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட முற்பணங்களிலிருந்து தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 221,981 மறை மீதியாக ஐந்தொகையில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நடைமுறைக் கணக்கிற்காக காசேட்டைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்காது அந்த நடைமுறைக் கணக்கில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கூற்றில் மீதியாக ரூபா 537,548 தெகை வங்கி மீதியாக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.2 தொங்கல் கணக்கு

தொங்கல் கணக்குகளின் மீதியாகக் காணப்படுகின்ற ரூபா 7,864,759 தொகைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது ஐந்தொகையில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இன்மையினால் அந்த விடயங்களை கணக்காய்வின்போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது பரீட்சிப்பதற்கோ முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| நிலையான சொத்துக்கள் | 44,423,507 | விரிவான பட்டோலை, நிலையான சொத்துப்பதிவேடு |
| பெறவேண்டிய கணக்குகள் | 950,536 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு அறிக்கை, விரிவான பட்டோலை. |
| செலுத்தவேண்டிய கணக்குகள் | 214,315 | |

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோப்பின் 59 ஆவது விதி | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வியாபார நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 19 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி, மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 05 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/22 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | நிலுவை வருமானம் தொடர்பான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,652,482 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 512,284 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| ஆதனவரி | 213 | - | - |
| வாடகை | 1,050 | 1,704 | 22 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 233 | 69 | - |
| ஏனைய வருமானம் | 6,780 | 2,803 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம்

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாகக் கிடைக்க வேண்டிய பணத்தை இனங்கண்டு பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 19 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 சனவரி 20 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசுகளின் பிரகாரம் 13 பொருள் வகைகளைப் பழுதுபார்ப்பதற்கும், 09 பொருள் வகைகளை அகற்றுவதற்கும், 10 பொருள் வகைகளை அழிவடையச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நாளாந்த பெறுவனவுப் பதிவேடொன்று பேணப்படாமையினால் மணித்தியாலமொன்றிற்கான கட்டணம் ரூபா 3,500 வீதம் வாடகைக்கு வழங்கப்பட்ட JCB இயந்திரத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(இ) JCB இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து 60 மாதாந்த தவணைகளில் செலுத்தித் தீர்ப்பதற்கு பெறப்பட்ட ரூபா 9,520,000 தொகையான கடன் பணத்திற்காக 2014 திசெம்பர் 19 ஆந் திகதி வரையிலும் 08 மாதாந்த தவணைகளுக்குரிய ரூபா 1,580,807 தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) விபத்தினால் மிக மோசமாக நட்ட இழப்பிற்குள்ளாகி அகற்றப்பட்டிருந்த கிழக்கு மாகாண பிரதம செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று ரூபா 1.8 மில்லியன் பாரியளவான பணத்தைக் செலவிட்டு சபையினால் 2012 மே 24 ஆந் திகதி பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதனை சபைக்கு கையேற்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 19 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 237,100 தொகை செலுத்தி பொருத்தப்பட்டிருந்த WiFi இணையதள முறைமை தொலைத்தொடர்பு இணைப்பு பெறப்படாமையின் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 19 ஆந் திகதி வரையிலும் செயலிழந்து காணப்பட்டது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

### 3.2.1 எதாபெந்திவெவ பிரதான வீதி நிர்மாணம்

இந்த வீதியின் இரண்டாம் கட்டம் 2 கிலோ மீற்றர் கல் இட்டு தார்போட்டு நிர்மாணிப்பதற்காக ரூபா 18,046,000 (வற் தவிர்த்து) பெறுமதியில் மூன்று மாத காலத்தில் நிர்மாணத்தைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2012 மே 31 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த வீதி நிர்மாணத்தின் செயல்முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படாமையின் காரணமாக 2012 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையில் ரூபா 2,954,923 செலுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டு 2014 மார்ச் 13 ஆந் திகதி ரூபா 19,577,095 (வற் தவிர்த்து) தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்கு 06 மாத காலத்தில் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் வேறொரு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கொள்வனவு நடைமுறைகளின் போது ஒப்பந்தக்காரர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மிகவும் தகுதியான ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்படாமையினால் ரூபா 4,485,418 மேலதிக கொடுப்பனவைச் செய்வதற்கும் குறித்த காலப்பகுதியில் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்வதற்கும் முடியாதிருந்தது.

(ஆ) ஒப்பந்தக்காரர் நிர்மாணங்களை திருப்திகரமானதாக மேற்கொள்ளாத சந்தர்ப்பத்தின் போது செயலாற்றல் பிணை முறியின் காலம் முடிவடைவதற்கு முன்னர் செயலாற்றல் பிணைமுறி பணமாக்கப்படாமையினால் அதன் பெறுமதியான ரூபா 902,330 தொகையை சபை இழந்திருந்தது.

(இ) இந்த வீதியை நிர்மாணிக்கும் போது 1+250 முதல் 1+450 இற்கு இடையே பல இடங்களில் கொங்கிரீட் கலவை குறித்த நியமித்திற்கு இல்லாமையாலும் கொங்கிரீட் தடிப்பம் 6 அங்குலத்தை விட குறைவாகக் காணப்படுவதன் அடிப்படையிலும் அந்த இடத்திற்கு பயன்படுத்தப்பட்ட 30 M3 கொங்கிரீட் அளவில் நீண்ட காலரீதியில் நிலைத்திருப்பது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஈ) 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் (2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதி திருத்தங்களின் கீழ்) ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 19,265,499 தொகைக்குரிய நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரியான (CIGFL) ரூபா 48,164 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 பிரதேச சபைக்காக நூலகமொன்றை நிர்மாணித்தல்

-----------------------------------------------------------------------------------------

தேசத்திற்கு மகுடம் (தெயட்ட கிருள) செயற்திட்டத்தின் மூலம் நூலகத்திற்காக இரண்டு மாடிக்கட்டிடத்தின் முதலாவது மாடியை நிர்மாணிப்பதற்காக ரூபா 7,048,316 (வற் தவிர்த்து) பெறுமதியில் மூன்று மாத காலத்தில் நிர்மாணங்களைப் பூர்த்திசெய்யும் அடிப்படையில் 2013 சனவரி 22 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தக்காரர் ரூபா 2,421,104 செய்யப்பட்ட வேலைப் பெறுமதிக்கு 2013 பெப்ரவரி மாதம் 12 ஆந் திகதி சமர்பித்த முதலாவது விலைப் பட்டியலுக்காக 12 மாத காலத்தின் பின்னர் 2014 ஏப்ரல் மாதம் செலுத்தப்பட்டமையால் 2013 யூன் மாதம் முதல் ஒப்பந்தக்காரரினால் நிர்மாணங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர் 2014 செப்தெம்பர் முதல் மீண்டும் நிர்மாணங்களை ஆரம்பித்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 16 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை.

(ஆ) ரூபா 352,420 பெறுமதியான செயலாற்றல் பிணைமுறி 2013 ஏப்ரல் 23 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் அதனை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரண்டு மாடிக் கட்டிடத்தின் முதலாவது மாடியை நிர்மாணிப்பதற்கான வரைபடக் குறிப்பின் படி 21 கொங்கிரீட் தூண்களுக்காக ஒரு தூணுக்கு 16 mm இருப்புக்கம்பி 04 மற்றும் 12mm இரும்புக் கம்பி 04 வீதம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஒரு தூணிற்கு 12 மில்லிமீற்றர் கம்பிகள் 02 கம்பிகள் வீதம் பயன்படுத்தப்பட்டு 21 கொங்கிரீட் தூண்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரும்புக் கம்பி 77 கி.கிராம் தூணிற்காக ஈடுபடுத்தப்பட்டமையினால் கட்டிடத்தின் நீண்டகால இருப்பு பிரச்சினைக்குரியதாக இருந்தது. இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலாக சபையின் செயலாளர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவித்திருந்த போதிலும் முன்னாள் சேயைாற்றிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பொறியியலாளர் இது தொடர்பாக உரிய செயல்நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்த போதும், தற்போது அவர் இடமாற்ற அடிப்படையில் சபையிலிருந்து வெளியே சென்றிருந்தாக அறிவித்திருந்ததார்.

### 3.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டு நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 28 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டது. அதன் படி வருடாந்த பாதீடு முறையான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| இரண்டாம் நிலை | 14 | 05 | 09 |
| மூன்றாம் நிலை | 16 | 08 | 08 |
| மொத்தம் | 31 | 14 | 17 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஏப்ரல் மாதம் முதல் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் பதவிக்காக தகுதியான நபரொருவரை நியமிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 திசெம்பர் 19 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பதில் கடமை அடிப்படையில் செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) நூலகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சாரதி, இயந்திர இயக்குனர் மற்றும் வேலைப் பரீட்சகர் போன்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனித வள முகாமைத்துவம்
(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு